**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 04.04.2025**

**முன்னிலை**

# திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)

# மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண். CP 156/SCIC/2022

திரு C. சதீஷ்குமார் மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி பதிவாளர், ... பொது அதிகார அமைப்பு
மாநில மனித உரிமைகள் ஆணையம்,
சென்னை 600 028

**ஆணை**

இவ்வழக்கானது ஏற்கனவே 13.02.2025 தேதியன்று ஆணையத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

> ”**மனுதாரரால் சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் 07.12.2021 தேதியிட்டு அனுப்பிய மனுவிற்கு பொதுத் தகவல் அலுவலர் உரிய காலத்திற்குள் தகவல்கள் வழங்காமல் இரண்டு மாதங்கள் கழித்து 24.02.2022 தேதியிட்டு மனுதாரருக்கு தகவல்கள் அனுப்பியுள்ளார். இதில் ஏற்பட்ட காலதாமத்திற்கு காரணமான பொதுத் தகவல் அலுவலர் திருமதி பாமா, உதவி பதிவாளர், அவர் மீது சட்டப்பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது என்பதற்கான அவரது விளக்கத்தினை ஒரு வார காலத்திற்குள் ஆணையத்திற்கு அனுப்பிவைக்*கவேண்டும்.***

**2.** மேற்குறிப்பிடப்பட்ட ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க பொதுத் தகவல் அலுவலர் திருமதி V. பாமா, உதவி பதிவாளர், தமிழ்நாடு மனித உரிமைகள் ஆணையம், சென்னை என்பவர் தனது காரண விளக்கத்தினை 13.02.2025 அன்று ஆணையத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3. *மேற்குறிப்பிட்ட பொது தகவல் அலுவலர்* திருமதி V. பாமா, உதவி பதிவாளர், தமிழ்நாடு மனித உரிமைகள் ஆணையம், சென்னை *அவரிடமிருந்து பெறப்பட்ட காரண விளக்கங்கள் ஆணையத்தால் பரிசீலனை செய்யப்பட்டு அவரது விளக்கம் ஏற்றுகொள்ளப்படுகிறது. எனவே, இதில் மேல்நடவடிக்கை ஏதும் தேவையில்லையென்று கருதி* ***இந்த புகார் மனுவின் மீதான விசாரணை ஆணையத்தால் முற்றாக்கம் செய்யப்படுகிறது.***

**ஒம்/-(முகம்மது ஷகீல் அஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 156/SCIC/2022</u>**

**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**
பொதுத் தகவல் அலுவலர்/
உதவி பதிவாளர்,
மாநில மனித உரிமைகள் ஆணையம்,
சென்னை 600 028

**<u>மனுதாரர்:-</u>**

திரு C. சதீஸ்குமார்,
த/பெ V. சொக்கலிங்கம்,
2/141, IOB அருகில்,
ஆறகழூர் அஞ்சல் 636 101
ஆத்தூர் தாலூகா, சேலம் மாவட்டம்.

**<u>நகல்</u>**

The Chairperson.
State Human Rights Commission,
Thiruvarnagam,
143, P.S.Kumarasamy Raja Salai,
(Greenways Road),
Chennai 600 028

Copy to: File TK/PS